# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 6. ஏப்ரல் 1998. கனி 9

ஆசிரியர்

B. அர்ஜுனன்

## கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்
(நீதி. 19:21.)

**✡ கடன்** - ஒருவரிடத்திலொருவர் அன்பு கூறுகிற கடனே யல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன் படாதிருங்கள் ரோம. (13 : 8)
ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் நீதி. (19:17.)

**✡ உதவி** - மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 25:40.)
நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விஷேசமாக விசுவாச குடும்பத்தார் களுக்கும் நன்மை செய்யக் கடவோம். (கலா. 6:10.)

**✡ சேமிப்பு** - பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் (மத். 6:20.)
அவனவன் விஷனமாயுமல்லாமல் கட்டாய மாயுமல்லாமல் தன்தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன் (11 கொரி. 9:7.)

பலத்தைத் தருமே
கிறிஸ்துவின் வசனம்
படித்தால் போதும்
விலகும் விசனம்

- தானியேல் தமிழ்வாணன்
மேல் விசாரம்

Published by,
THE WORLD ~~BIBLE~~ LITERATURE PUBLICATIONS
Post Box No. 5,
BATLAGUNDU - 624202.
S. India.

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | ஏப்ரல் 1998 | கனி 9


ஆசிரியருரை:

## ஒரே தேவன்
## One God

இச்செய்தியின் மூலம் ஒரே தேவனைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய நாட்களில் முப்பத்து முக்கோடிக்கும் அதிகமான தேவர்களை வைத்துக்கொண்டு நம் மக்கள் வழிபட்டு வருகின்றனர். கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில் "வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்" என 1 கொரி. 6:5-6ல் வாசிக்கின்றோம்.

மனிதன் தன் புத்திக்கு எட்டிய அளவு மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான அநேக தேவர்களை உண்டாக்கி, அவைகளை நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறான். இப்படி அநேக தேவர்கள் இருந்தாலும் அவைகளனைத்தும் மனிதனுடைய கையின் கிரியைகளாகவே இருக்கிறது. மேற்கூறிய வசனத்தில் சொல்லப்பட்ட தேவன் நாம் காண்கிற வானத்தையும், பூமியையும், சகலத்தையும் உண்டாக்கினவர். இவரை எந்த ஒரு மனிதனும் சிருஷ்டிக்கவோ, தன் யுக்தியினால் உருவாக்கவோ முடியாது. மனிதனுடைய எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் அப்பாற்பட்டவராக, ஆதியும் அந்தமுமாக இருக்கிறவராகவே இருக்கிறார். இந்த தேவனை நீங்கள் கண்டு கொள்ள வேண்டும். அவர் ஒருவருக்கே ஆராதனை செய்ய வேண்டும். அப்பொழுது அவரோடு கூட நித்திய மகிமையிலே பிரவேசிக்க முடியும்.

நம்முடைய முற்பிதாக்களாகிய இஸ்ரவேல் மக்களுக்கு யாத். 20:3ம் வசனத்தில் "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்ற கட்டளையைக் கொடுத்திருந்தார். இப்படிப்பட்ட அருமையான கட்டளையைப்

பெற்ற இஸ்ரவேல் மக்கள் ஒரு கன்றுக் குட்டியை உண்டாக்கி இதுதான் எங்கள் தேவன் என்று சொல்லி ஆராதித்து வந்தார்கள். எதை தேவன் செய்யக்கூடாது என்று சொல்கிறாரோ அதை உடனே செய்வது முதல் மனிதனாகிய ஆதாம் முதல் இன்று வரை மனிதனுக்குள்ளாக ஊறிப்போன ஒன்றாக இருக்கிறது. தேவன் மரத்தைப் படைத்தார், மனிதனுக்கு நன்மை கொடுக்கும் படியாக, சூரியனைப் படைத்தார், மனிதனுக்கு வெளிச்சம் கொடுக்கும்படியாக, அதைப் போலவே சந்திரனையும், நட்சத்திரங்களையும் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார். மொத்தத்தில் இவையாவையும் மனிதனுடைய நன்மைக்காகவே சிருஷ்டித்தார். ஆனால் மனிதனோ, தன் சிருஷ்டிகரை தொழுது கொள்ளாமல் சிருஷ்டியை தொழுது கொண்டு வருகிறான்.

வேதபாரகரில் ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடம் வந்து கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான். அதற்கு அவர் "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (மாற்: 12:29) என்று சொல்லி போதிக்க ஆரம்பித்தார். அந்த ஒரே தேவனைப் பற்றி தான் இப்பொழுது நான் உங்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறேன். இந்த "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். (யோவா. 4:24)"

சங்கீதக்காரனாகிய தாவீது அரசன் இவ்விதமாகக் குறிப்பிடுகிறான். "கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது'' சங். 33:12. ஆம், பிரியமானவர்களே, இவ்வுலகத்தில் உங்களை சிருஷ்டித்த இந்த தேவனை நீங்கள் உங்களுக்குச் சொந்த தெய்வமாகக் கொண்டிருக்கிறீர்களா? அப்படியிருந்தால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், பாக்கியவான்களாகவும் இருப்பீர்கள். இல்லையேல் இவ்வுலகத்தில் நீங்கள் நம்பிக்கொண்டிருக்கிற எந்த தேவர்களும் இப்புவியிலும், மறுமையிலும் உங்களை விடுவிக்க மாட்டாது. ஏனென்றால் அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிலிருந்தும் காணாது, அவைகளுக்குக் காதுகளிலிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது; அவைகளுக்குக் கைகளிலிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவுமாட்டாது. அவைகளை பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைக்ளைப் போலவே இருக்கிறார்கள் என்று சங். 115:4-8ல் வாசிக்கின்றோம்.

வானத்திற்கும், பூமிக்கும் ஒரே தேவன் உண்டு. அவர் பரலோகத்தில் இருக்கிறார். அவரிடம் நாம் செல்ல வேண்டுமென்றால் இப்புவியில் நாம் இருக்கும் நாட்களில் அவரைக் ஏற்றுக்கொண்டு அவர் கொடுத்த பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, இவ்வுலகத்தை மீட்கும்படியாக. தேவனால்

அனுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்படிந்து, அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு யோவா. 14:6ம் வசனத்தின்படி இயேசு கிறிஸ்து மூலமாய் பிதாவினிடத்தில் சேரக் கடவோம்.

பர்வதங்கள் தோன்றும் முன்னும், நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கும் முன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறார் சங். 90:2.

## நீ ஒரு கிறிஸ்த்வனாக மாத்திரம் இருக்க முடியும்
## You can be just a Christian

மதப் பிரிவினைகள் நிறைந்த ஒரு உலகத்தில் இன்று நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம். நூற்றுக்கணக்கில் சபைகளும், ஆயிரக்கணக்கில் பெயர்களும் பட்டங்களும் உள்ளன. கிறிஸ்துவின் காரியத்தில் இது உதவி செய்திருக்கவில்லை. ம்மாறாக பெரும்பாலான மக்களுக்கு தீய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவாக மிகக் குழப்பமும் வெறுப்பும் அடைந்த நிலையில், மக்கள் மதத்தை முற்றிலும் நிராகரிக்கும் அளவுக்கு வந்துவிட்டனர். ஆனால் பிரட்சனைகக்கு தீர்வு இதுவா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் இதை விட ஒரு சிறந்த வழி இருக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருப்பது சாத்தியம் என்று உங்களுக்குத் தெரியுமா? அது சாத்தியமே. உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் நீங்களும் பிறரும் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்க முடியும். கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொள்ள முடியும் போது, ஏன் மனிதனுடைய பெயர்களையும் பட்டங்களையும் தரித்துக்கொள்ளுகிறீர்கள்? வேதாகமம் மாத்திரமே உங்களை கிறிஸ்தவனாக உண்டாக்கும்.

புதிய ஏற்பாடு காலத்தில் மக்கள் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருந்தனர். உதாரணமாக, "...முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று", என நாம் படிக்கிறோம் (அப். 11:26). எந்த வகையைச் சார்ந்த கிறிஸ்தவர் என்பது இன்றைய நாட்களில் கேட்கப்படும் கேள்வி. ஆனால் அந்நாளில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட்டனர்.

மீண்டும் அகிரிப்பா அரசனுக்கு பவுல் போதிப்பதைப் பற்றி நாம் படிக்கிறோம். "...நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என அரசன் பதில் கூறுவதையும் பார்க்கிறோம் (அப். 26:28). கர்த்தரின் உபதேசத்திற்குக் கீழ்படிந்தால், அது ஒருவனை கிறிஸ்தவனாக்கும் என இம்மனிதன் எவ்வாறு அறிவான்?

பிறருக்கு அது என்ன செய்தது எனத் தெளிவாக அறிந்திருந்தான். அல்லது அவனுக்கு அது குறிப்பாகப் போதிக்கப்பட்டது. எப்படியிருப்பினும், கிறிஸ்துவுக்குக் கீழ்படியும் போது, அதன் விளைவாக அவனை அது கிறிஸ்தவனாக்குகிறது என அவன் அறிந்திருந்தான். இறுதியாக, பேதுரு எழுதுகிறார்; "ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமல் இருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன்" (1 பேதுரு 4:16).

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவன் என்ற பெயர் மூன்று முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் அது கர்த்தருக்குக் கீழ்படிந்திருக்கிற தனி மனிதன் அல்லது மனிதர்களையே குறிப்பிட்டு தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அல்லது கர்த்தருக்கு ஒருவன் கீழ்படிகிறபோது, அது அவனை கிறிஸ்தவனாக்குகிறது எனக் காட்டப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் என்ற வார்த்தைக்கு, கிறிஸ்துவைப் போல் இருப்பது எனப் பொருள். கர்த்தரின் நாமத்தைத் தரித்து கொள்ளாமல், அவருக்கு ஒருவன் எப்படி கீழ்படியக்கூடும்? கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ளுவதற்குப் பதிலாக மனிதன் உருவாக்கிய பெயர்களைத் தரித்துக் கொண்டு, கிறிஸ்துவைப் போலவோ அல்லது கிறிஸ்துவின் ஆவியை உடையவனாக இருப்பதோ ஒருவனுக்கு சாத்தியமா? நிச்சயமாக அது முற்றிலும் சாத்தியமல்ல.

பெயரில் ஒன்றுமில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்திலேயே உள்ளது என்று சுவிசேஷம் கூறுகிறது (அப். 4:12). அதற்கு மாறாக, இரட்சிப்பு வேறு எந்தப் பெயரிலும் இல்லை. கொரிந்து சபையில் சில அங்கத்தினர்கள் பிரிந்திருந்து, சிலர் தாங்கள் பவுலைச் சார்ந்தவர்களென்றும் கூறியதைப் பற்றி 1 கொரித்தியர் 1:12ம் வசனத்தில் பார்க்கிறோம். பவுல் அதற்காக அவர்களை ஆதரிக்க வில்லை; மாறாக அதைக் கண்டித்தான். "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகள் இல்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்" என்றார் (1 கொரி. 1:10). பின்னர் அவர்களுடைய நடவடிக்கையின் அபத்தத்தைக் காட்டும் வகையில், "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்திலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?' என அவன் கேட்டான் (1 கொரி. 1:13)

சந்தேகமின்றி, கிறிஸ்து ஒருவரே என்றும், அவர்களுக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தார் என்றும், கர்த்தரின் பெயரால் அவர்கள் திருமுழுக்குப் பெற்றிருந்தார்கள் என்றும் அவர்கள் அறிவார்கள். எனவே, அவர்கள் மனிதர்களின் பெயர்களைத் தரித்துக் கொள்ளுவதற்கு மாறாக கிறிஸ்துவின் பெயரைத் தரிக்க வேண்டும் என்ற முடிவை நாம் பார்க்கிறோம். அதே நிலை இன்றும் உண்மையாக இருக்கிறது.

வேதாகமத்தில் நீங்கள் காண முடியாத பெயர்களையும் பட்டங்களையும் நீங்கள் தரித்துக் கொண்டிருந்தால், நீங்கள் வேதாகமம் கற்பிக்கிறதைப் போன்ற ஒரு கிறிஸ்தவன் அல்ல. சில வேளைகளில் வேதாகமத்தில் வரும் பெயரை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கலாம், ஆனாலும் அதை நீங்களோ பிறரோ தரித்துக் கொள்ள கர்த்தருக்கு சித்தமில்லையென்றால், அதை நீங்கள் பயன்படுத்துவது தவறு. கிறிஸ்தவன் என்ற பெயருக்கு முன்பாக அல்லது பின்னராக எதையாகிலும் நீங்கள் சேர்த்துக்கொண்டால், கர்த்தருடைய நாமத்தை நீங்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, நீங்கள் எப்படியிருக்க வேண்டுமென்று வேதாகமம் கற்பிக்கிறதோ அக்கருத்துப்படி நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஏதாவது ஒருவகை கிறிஸ்தவனாக இருந்து கொண்டு, கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியாது. ஒன்றில் நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்லது நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்ல.

உங்கள் வேதாகமத்தைப் படித்துக் கற்றுக்கொள்ளும்படியாகவும், அதன் பின் வேதம் சொல்லுவது போல நடக்கவும் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அவ்வாறு செய்வீர்களானால் நீங்கள் என்னவாக இருப்பீர்கள் என நாங்கள் அறிவோம். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருப்பீர்கள். அதற்கு மேலோ அல்லது கீழோ அல்ல. அது போதுமானதாக இருக்கக் கூடாதா? நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருக்க முடியும் போது, ஏன் கிறிஸ்தவனுக்குக் கூடுதலாக அல்லது கிறிஸ்தவனுக்குக் குறைவாக நீங்கள் இருக்க வேண்டும்?

நீங்கள் கர்த்தருக்கு செவி கொடுத்து (ரோமர். 10:17), தேவனை விசுவாசித்து (எபிரேயர். 11:6), உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு (அப். 17:30) கிறிஸ்துவை அறிக்கை செய்து (மத்தேயு. 10:32), பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றால் (அப். 2:38; மாற்கு 16:16), பின்னர் கர்த்தர் உங்களை இரட்சிப்பார். அது உங்களை ஒரு கிறிஸ்தவனாக மட்டும் ஆக்கும். அதே கீழ்படிதலானது நீங்கள் வேதாகமத்தில் படிக்கக் கூடிய ஒரே ஒரு சபையான கர்த்தருடைய சபையில் உங்களை அங்கத்தினராகவும் ஆக்குகிறது. (அப். 2:47; மத்தேயு. 16:18; ரோமர் 16:16).

ஒரு கிறிஸ்தவனாக மாத்திரமும், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராகவும் நீங்கள் இருக்கும்போது, சரியான பாதையில் நீங்கள் நடப்பதை அறிவீர்கள். கிறிஸ்துவின் நாமத்தை நீங்கள் தரித்துக்கொண்டிருப்பதையும், அவருடைய சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதையும் நீங்கள் எல்லாரிடமும் பெருமையாகக் கூறிக் கொள்ள முடியும். "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என பவுல் ஏன் எழுதினார் என்பதையும் புரிந்து கொள்ள முடியும் (கொலோ. 3:17)

**J. C. Choate** — தமிழில் எஸ். எஸ். ராஜன்

## மார்ச் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள்

1. N. தானியேல் தமிழ்வாண்ணன் - மேல்விசாரம்
2. G. கோபி - மேல்விசாரம்
3. R. பெருமாள், - கோபி
4. P. இளங்கோவன் - செட்டிபாளையம்
5. R. ரவிச்சந்திரன் - செட்டிபாளையம்
6. C. தர்மராஜ் - பாண்டமங்களம்
7. P. பழனிச்சாமி - நிமிந்தப்பட்டி
8. J. மேரிகலைவாணி - வத்தலக்குண்டு
9. S. ரேச்சல்அமுதமணி - மேல்விசாரம்

## மார்ச் மாத இதழின் விடைகள்

1. யோபு - யோபு 31:33
2. விசுவாசமே - கலா. 5:6
3. துரோப்பீமுவே - 11 தீமோ. 4:20
4. சபிக்கப்பட்டவன் - உபா. 27:18
5. பிலதெல்பியா - வெளி. 3:10
6. உயர்த்தவில்லை
7. ஜீவனை
8. சீத்தீம்
9. சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்
10. பவுல்

## இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிடமாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு எப்படியிருக்கும்?
2. இஸ்ரவேலருக்கு எந்த வருஷம் யூபிலி வருஷமாக இருந்தது?
3. மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் எப்படிப்பட்ட சந்தோஷம் உண்டாயிருக்கும்?
4. சுகபோகமாய் வாழ்கிறவள் எப்படிப்பட்டவள்?
5. முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் எப்படியிருக்கிறீர்கள்?
6. புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாமா?
7. ஒரு கொம்பை வெட்டி தண்ணீரில் எறிந்து கோடரியை மிதக்கப் பண்ணினவன் யார்?
8. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே யாருடைய நாமமே கட்டளையிடப்பட்டுள்ளது?
9. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் யாரை உடையவனல்ல?
10. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்கு என்ன செய்யாதிருங்கள்?

பெண்கள் பகுதி

## நீங்கள் ஒரு குணசாலியான ஸ்திரியாக இருக்கலாமே!
## You Can be a Virtuous Woman!

நீங்கள் அமைதலுள்ளவர்களாய் உங்கள் சொந்த அலுவல்களை பார்க்கவும், உங்கள் சொந்த கைகளினாலே வேலை செய்யவும் வேண்டும்'' (தெச. 4:12.) இந்த வசனம் மூன்று காரியங்களை கட்டளையாக போதிக்கின்றது. "அமைதலுள்ளவர்களாய் இருக்க வேண்டும்". வாயாடியாய் இருப்பதில் எத்தனை வம்பு, அதனால் மற்றவர்களுக்கும் இடையூறுகள், நமக்கும் சஞ்சலம். நாம் அமைதியாய் இருப்பதை விட்டு அதிகமாய் பேசும் போதுதான் அதிக வம்புகளில் மாட்டிக்கொள்கிறோம்.

"சொந்த அலுவல்களைப் பார்க்க வேண்டும்" நம்முடைய வேலைகளை நாமே செய்துகொள்வோமானால் புறங்கூறுதல், சண்டை, சச்சரவு போன்றவைகள் நம் மத்தியில் ஏற்படாது. வீடு, சபை, பள்ளி, சமுதாயம், நாடு ஒவ்வொன்றிலும் உற்று நோக்கும் போது, அதன் மத்தியில் ஏன் வாக்குவாதம், ஏன் குழப்பம், ஏன் சண்டை; காரணம் மற்றவர்கள் வேலையில் நாம் தலையிடுவது. உன்னுடைய சொந்த அலுவல் உனக்கு எவ்வளவு முக்கியமோ, அதே போல் மற்றவர்களின் சொந்த அலுவல்கள் அவரவர்களுக்கு முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய வேளையில் நாம் சிரத்தையுள்ளவர்களாய் இருப்போமானால், பிரச்சனை ஏன் உண்டாகின்றது?

"சொந்த கைகளினால் வேலை செய்ய வேண்டும்.'' மனிதனுக்கு வேலை என்பது தேவனிடத்தில் இருந்து அருளப்பட்ட ஆசீர்வாதம். எல்லா நன்மைகளும் தேவனிடத்தில் இருந்து வருகிறது. ஆனாலும் நாம் வாழும்படி தேவனால் பெற்றுக்கொண்ட வேலையில், தேவன் நமக்கு தந்தருளின ஞானத்தின்படியும், பெலத்தின்படியும் உழைத்து அதற்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சகோதரியே! உன் சுய புத்தியின் மேலும், உன் சுய பெலத்தின் மேலும் சாராதே!

1. உன் வேலை உன்க்கு கொண்டு வரும் ஆசீர்வாதத்தை எண்ணிப்பார். நாம் செய்யும் வேலை மற்றவர்களுக்கு இலாபத்தைக் கொண்டுவந்தாலும், நம்முடைய கடினமான உழைப்பு நமக்கு ஆசீர்வாதத்தை கொடுக்கின்றது. நாம் செய்கின்ற வேலை நமக்கு திருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. வேலையின்றி வீண் அலுவர்காரராய் இருப்பவர்கள் துக்கமும், சஞ்சலத்தையும் தங்களுக்கு உண்டாக்கிக் கொள்கிறார்கள். மற்றர்களுக்கு இடஞ்சலுமாய் இருக்கிறார்கள். (1 தீமோ. 5:13).

நீதி 31:10ல் ஓர் அழகிய பெண்ணை வர்ணிக்கும் போது "குணசாலியான ஸ்திரி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய குணசாலியான ஸ்திரியாக மாறுவது என்பது சுலபமான செயல் அல்ல. இந்த நிலையை அடைய வேண்டுமானால், எல்லா செயல்களையும் சரியான மனப்பாங்குடன் தனக்காக மாத்திரம் அல்ல, பிறருக்காகவும் வாழுகிற தியாகமான வாழ்க்கையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் (நீதி 31:13). அப்படிப்பட்ட தியாகமான வாழ்க்கை, எத்தகைய ஆசீர்வாதங்களை கொண்டுவருகிறது பாருங்கள். "அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவ்னை பார்த்து, அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேம்பட்டவள் என்று புகழுகிறான்" (நீதி 31:28, 29). உன் புருஷன் உன்னைப் பார்த்து, "நீ அநேகம் பெண்களுக்குள்ளே மேம்பட்டவள்" என்று கூறுவது எப்படிப்பட்ட புகழ்ச்சி! எவ்வளவு மகிழ்ச்சியான காரியம்!

2. நாம் முன்னதாக பார்த்தபடி "சோம்பல்" உள்ளவர்கள் தேவனுக்கு முன் அருவருப்பாய் இருக்கிறார்கள் (1 தீமோ. 5:13); தேவபக்தியான பெண் "சோம்பலின் அப்பத்தை புசிக்க மாட்டாள் (நீதி. 31:27); "ஒருவன் வேலை.செய்ய மனதில்லா திருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" (11 தெச. 3:10). ஆனால் பிசாசானவன் சோம்பலாய் இருக்க மட்டும் நம்மை தூண்டுவதில்லை; அதற்கு ஏற்ற போக்கையும், காரணத்தையும் கொண்டு வருவான். "வெளியிலே சிங்கம் வீதியிலே கொலையுண்பேன் என்று சோம்பேறி சொல்லுவான்" (நீதி. 22:13).

3., ஞானமுள்ள கிறிஸ்தவ சகோதரி "சுறுசுறுப்புள்ளவளாய்" இருக்க வேண்டும். நமக்கு கொடுக்கப்பட்ட இந்த குறுகிய நாட்களில் இதைக் குறித்து சிந்திக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது. "சோம்பேறிதான் வேட்டையாடிப் பிடித்ததைச் சமைப்பதில்லை" (நீதி.12:27) நாம் சோம்பலாய் இருப்போமானால் நம் வீடு சிலந்தி கூடு கட்டவே பயன்படும். பாவத்தில் மரித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தைக் கூட அறிவிக்க முடியாது.

சுறுசுறுப்புள்ள நமது சகோதரிகளில் அநேகர், தங்களு டைய பிள்ளைகளை சோம்பல் உள்ளவர்களாய் வளர்க்கிறார்கள். அவர்களை சிறு வேலைக் கூட செய்ய அனுமதிப்பதில்லை. அவர்கள் தங்களுடைய சுறுசுறுப்பினால், தாங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தை தங்களுடைய பிள்ளைகளுக்கு ஏனோ கொடுக்க தவறி விடுகிறார்கள்! "சுறுசுறுப்பு" ஓர் சகோதரிக்கு அவள் வாழ் நாள் முழுவதும் நன்மைகளை கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. சகோதரியே நீ உனக்கு செய்து கொள்ளும் இந்த உதவி உனக்கு ஆசீர்வாதம்மல்லவா?. நீ இந்த நன்மையை செய்யத் தவறினால் அது உனக்கு சாபமல்லவா? இந்த நன்மையைச் செய்தால் ஆசீர்வாதமல்லவா?

- Selected.

## FORM IV
## (See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Batlagundu |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printers Name | : | C. Pandiarajan |
| 4. Address | : | Santhi Printers, Main Road, Batlagundu-624202. |
| 5. Nationality | : | Indian |
| 6. Publisher's Name | : | B. ARJUNAN |
| 7. Address | : | 2-2-102 D/5, Rajan Nagar, Batlagundu-624202. |
| 8. Editor's Name | : | B. ARJUNAN |
| 9. Address | : | as above |

I B. ARJUNAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

B. Arjunan

Dated 31 3 98 — Signature of Publisher

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI:** Sundays 8-45 p.m. - 9-00 p.m. and Thursdays, 9-00 p.m. - 9-15 p.m. Speaker, Sunny David, Box 3815, New Delhi-110049.

**ENGLISH:** Friday 7-45 p.m. - 8-00 p.m. Speaker, J. C. Choate, Box 3815, New Delhi-110049.

**TELUGU:** Sundays, Mondays, Tuesdays, Thursdays, 2-00 p.m. - 2-15 p. m. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada-533001.

**TAMIL:** Sundays, Tuesdays and Thursdays, 6-45 p.m.- 7-00 p.m. Speaker, P. R. Swamy, Box 8405, Bangalore-560084.

**MALAYALAM:** Fridays, 3-45 p.m. - 4-00 p.m. Speaker, P. K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Thiruvananthapuram-695034.

**KANNADA:** Sundays 1-45 p.m. - 2-00 p.m. Speaker, Robert Ratnakar, Box 448, Bangalore-560004.

Please write to these addresses for Bible correspondence courses, magazines, and other Christian literature in your language.

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf of Church of Christ
2.2.102-D/5, Rajan Nagar,
Batlagundu and Printed at
Bharathi Computer Offset Press
for Shanthi Printers Main Road,
Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி

வியாழன் மாலை 6-45 மணி



கிறிஸ்துவின் சபை,
2.2.102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278.

From
WORD OF CHRIST,
Post Box No. 5,
BATLAGUNDU - 624202.
S. India.

To